# கோபத்தினால் விளையும் தீமைகள்

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# கோபத்தினால் விளையும் தீமைகள்

**************************************************

இன்று உங்களுக்குக் கோபத்தினால் விளையும் துன்பங்களை விளக்குகிறேன்.

பெரியோர் கூறும் அறநெறி உபதேசத்தைக் கேட்கும் பொழுது எவரொருவர் மனத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் எழவில்லையோ; பெரியோர்கள் கூறிய அறநெறி உபதேசத்தைக் கேட்கும்பொழுது எவரொருவர் மனத்தில் தான் செய்த குற்றங்களுக்காக வேதனையும் வெட்கமும் அச்சமும் எழவில்லையோ; பெரியோர் கூறிய அறநெறி உபதேசத்தைக் கேட்கும்பொழுது எவரொருவர் மனத்தில் பகைமையும் வெறுப்பும் கோபமும் எழுகின்றதோ; இவர்கள் யாவரும் அறத்தை உள்ளத்தில் விரும்புவதில்லை. அறவழியில் அடியெடுத்து நடப்பதுமில்லை. உள்ளத்தில் அறத்தை விரும்பி, அறவழி நடக்காதோருக்கு தெளிவான பக்தியும் தெய்வலோகச் சிறப்பும் கிட்டாது எனப் பெரியோர் கூறியுள்ளனர்.

பெரியோர், அறத்தையும் நல்ல பண்புகளையும் பலவகையில் உலகத்துக்கு உபதேசம் செய்துள்ளார்கள். அறிவுரை

சொல்லத்தான் முடியும். கேட்போர் அதனை ஞாபகத்தில் வைத்து, சிந்தித்து, அவ்வழி நடந்தால், அவர்கள் வாழ்வில் துன்பங்கள் குறைந்து நன்மைகள் கூடும்.

பகவான் புத்தர் இவ்வாறு கூறியுள்ளார்:

உங்களிடம் குற்றங்கள் உள்ளனவா என்று ஆராய்ந்து பாருங்கள். உங்களிடம் குற்றங்கள் உள்ளன என்று அறிந்தால், அவற்றை உடனே நீக்கிவிடுங்கள். குற்றங்களின் பிற்பயன் துன்பம். ஒரு மனிதன் தன் தலையில் அணிந்திருக்கும் தலைப்பாகை தீப்பிடித்துக் கொள்ளுமானால், தன் முழு கவனத்தையும் அதில் செலுத்தி அத்தீயை அணைப்பதுபோல், உங்களிடம் குற்றங்கள் உள்ளன என்று அறிந்தால், உடனே அக்குற்றங்களை நீக்கிவிடுங்கள். இல்லையேல், குற்றங்கள் பல செய்து, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சாமல் வாழ்பவன் வாழ்வு, அவன் செய்யும் குற்றங்களினாலேயே அழிவுக்கு வரும்.

கோபத்தினால் விளையும் துன்பங்களை விளக்குகிறேன் எனக்கூறினேன். குற்றங்களில் ஒன்று கோபம். கோபம் கொடியது. கோபம் ஒரு மனிதனை ஆட்கொள்ளுமாயின், அந்தக் கோபம் எனும் தீ, அவனையும் சுடும்; மற்றவர்களையும் சுடும். அவனுக்கும் துன்பம்; மற்றவர்களுக்கும் துன்பம். எப்படி? ஒரு மரம் தீப்பிடித்துக் கொள்ளுமாயின், அத்தீயினால் அந்த மரம் அழியும்; அந்த

மரத்தைச் சார்ந்துள்ள மற்ற மரங்களும் அழியும். ஆகவே, தனக்கும் கேட்டை விளைவித்து, மற்றவர்களுக்கும் கேடு செய்யும் கோபம் கொடியதே!

**கோபம் உள்ளிருந்தே கொல்லும் விரோதி. உள்ளிருந்தே கொல்லும் பகைவன். நம்முள்ளிருந்தே நம்மைக் கொள்ளும் பகைவன் இந்தக் கோபம். ஆகவே, அப்பகைவனுக்கு மனத்தில் இடம் கொடுக்காதீர்கள் என்கிறார் பகவான் புத்தர்.**

நம் பகைவர்கள் நமக்குச் செய்ய விரும்பும் கேடுகளையெல்லாம், நம் மனத்தில் எழும் கோபமே நமக்குச் செய்துவிடும். நம் பகைவர்களால் நமக்குக் கேடு செய்யப்பட முடியாவிட்டாலும் கூட, அவர்கள் செய்ய விரும்பும் கேடுகளையெல்லாம், நம் மனத்தில் எழும் கோபமே நமக்குச் செய்துவிடும்.

நம் பகைவர்கள் நமக்கு நண்பர்கள் இருப்பதை விரும்பமாட்டார்கள்; உறவினர்கள் இருப்பதை விரும்பமாட்டார்கள்; பொருள் இருப்பதை விரும்பமாட்டார்கள்; புகழ் இருப்பதை விரும்பமாட்டார்கள். நம் பகைவர்களால் நம் நண்பர்களை நம்மிடமிருந்து பிரிக்க முடியாவிட்டாலும் நம் உறவினர்களை நம்மிடமிருந்து பிரிக்க முடியாவிட்டாலும் நம் செல்வத்தை நம்மிடமிருந்து அழிக்க முடியாவிட்டாலும்

நம் புகழை அழிக்க முடியாவிட்டாலும் நம் மனத்தில் எழும் கோபம் நம்மை நம் நண்பர்களிடமிருந்து பிரித்துவிடும்; நம் உறவினர்களிடமிருந்து நம்மைப் பிரித்துவிடும்; நம் செல்வத்தை அழித்துவிடும்; நம் புகழை அழித்துவிடும். ஆகவே, நம் விரோதி நமக்குச் செய்ய விரும்பும் கேடுகளையெல்லாம், அவனால் அக்கேடுகளைச் செய்ய முடியாவிட்டாலும் கூட நம் மனத்தில் எழும் கோபமே அக்கேடுகளையெல்லாம் நமக்குச் செய்துவிடும்.

கோபம் உள்ளிருந்தே கொல்லும் பகைவன். உள்ளிருந்தே கொல்லும் விரோதி. நம்முள்ளிருந்தே நம்மைக் கொல்லும் பகைவன். எப்படிக் கொல்லும்?

கோபம் ஒரு மனிதனை வெல்லுமானால், இருள் அவன் மனத்தை ஆட்கொள்ளும். அவன் அறிவை இழப்பான். அறத்தையும் நல்ல பண்புகளையும் மறப்பான். நல்லனவற்றில் மகிழ்ந்தது போல் இப்பொழுது தீயனவற்றில் மகிழ்வான். நன்றி மறந்து கேடுகள் செய்வான். கோபம் தணிந்தபின் தீயினால் எரிக்கப்படுவதுபோல் துன்புற்று வருந்துவான்.

கோபம் வெல்லுமாயின் வெட்கத்தை மறப்பான்; பழிக்கு அஞ்சமாட்டான்; அறிவிழந்து, அறத்தை மறந்து, நல்ல பண்புகளை இழந்து கேடு செய்வான். கடுஞ் சொற்களால் பிறரைத் தீயினால் சுடுவதுபோல் எரிப்பான். பெற்ற தாயின் மனம் புண்படப் பேசுவான்;

தந்தை மனம் புண்படப் பேசுவான்; நல்லோர் மனம் புண்படப் பேசுவான். கடுஞ்சொற்களால் நண்பர்களையும் மனைவியையும் பிள்ளைகளையும் உறவினர்களையும் தீயினால் சுடுவதுபோல் எரிப்பான். சீறித் தீண்ட வரும் நாகத்தைக் கண்டு அஞ்சுவதுபோல் இவனைக் கண்டு எல்லாரும் அஞ்சுவார்கள். பதுங்கி இருந்து வழிப் போக்கன் மேல் பாயும் திருடனைக் கண்டு அஞ்சுவதுபோல் இவனைக் கண்டு எல்லாரும் அஞ்சுவார்கள்.

அது மட்டுமல்ல. கோபம் ஒரு மனிதனை வெல்லுமானால் இருள் அவன் மனத்தை ஆட்கொள்ளும். அவன் அறிவிழந்து, அறத்தை மறந்து, நன்றி மறந்து கேடு செய்வான். கடுஞ்சினத்தில் பெற்ற தாயையும் கொல்வான்; தந்தையையும் கொல்வான்; மற்ற மனிதர்களையும் கொல்வான்.

எல்லோரும் தம் நலனைத்தான் விரும்புவார்கள். தமக்குத்தாமே தீங்கு செய்துகொள்ள விரும்பமாட்டார்கள். ஆனால், கடுஞ்சினத்தால் மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்வான். கடுஞ்சினத்தில் அறிவிழந்து ஆயுதங்களால் தன்னையே அழித்துக் கொள்வான். கடுஞ்சினத்தில் அறிவிழந்து விஷம் குடித்துத் தன்னையே அழித்துக் கொள்வான். கடுஞ்சினத்தில் கயிற்றினால் தூக்கிட்டுக் கொண்டு இறப்பான். கடுஞ்சினத்தில் நீரில் மூழ்கித் தன்னையே அழித்துக் கொள்வான்.

இவ்வுலகில் மூன்று வகை மனிதர்கள் உள்ளனர் என்று பகவான் புத்தர் கூறியுள்ளார். அதாவது, கோபத்தில் மூவகை உண்டு என்கிறார்.

முதலாவது, பாறையில் செதுக்கிய கோடுபோல்; இரண்டாவது, மண்ணில் கீறிய கோடுபோல்; மூன்றாவது, நீரில் கீறிய கோடுபோல்.

பாறையில் செதுக்கிய கோடு, காற்றாலும் மழையாலும் அழிவதில்லை. அது நீண்ட காலம் இருக்கும். சிலருக்குக் கோபம் அடிக்கடி வரும். சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் கோபித்துக் கொள்வார்கள். இவர்களின் கோபம் தணிவதில்லை. நெருப்பு புகைவது போல் உள்ளத்தில் புகைந்து கொண்டேயிருக்கும். இவர்களின் கோபம் நீண்ட காலம் இருப்பதால் இவ்வகையான கோபத்தைப் பாறையில் செதுக்கிய கோடுபோல் என்கிறார் பகவான் புத்தர்.

மண்ணில் ஒரு கோடு கீறினால், அந்தக் கோடு மழையினாலும் காற்றாலும் சில காலத்தில் அழிந்துவிடும். சிலருக்குக் கோபம் அடிக்கடி வந்த போதிலும் அந்தக் கோபம் சிறிது நேரத்தில் தணிந்துவிடும். அது மண்ணில் கீறிய கோடுபோல் சிறிது நேரத்தில் தணிந்துவிடும்.

நீரில் கீறிய கோடு உடனே மறைந்து விடும். சிலருக்குக் கோபம் எழுந்த போதிலும் அது நீரில் கீறிய

கோடுபோல் உடனே மறைந்துவிடும். இவர்கள் கோபத்தை மனத்தில் நிறுத்தி எவருக்கும் தீங்கு செய்யமாட்டார்கள்.

ஔவையாரும் கோபத்தால் ஆட்கொண்ட மனிதர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறார்.

**கற்பீளவோடு ஒப்பர் கயவர், கடுஞ்சினத்துப்**
**பொற்பிளவோடு ஒப்பாரும் போல்வாரே - விற்பீடித்து**
**நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே**
**சீர் ஒழுகு சான்றோர் சினம்.**

கல் பிளந்தால் மீண்டும் கூடாது. கீழ்த்தரமானவர்களின் சினம் பிளந்த கல்போன்றது என்கிறார் ஔவையார். கீழ்த்தரமானவர்கள் கடுங்கோபத்தால் வேறுபட்டால், பிளந்த கல்போல் இனி கூடமாட்டார்கள். நல்லவர்கள் இவர்களைச் சமாதானப் படுத்தினாலும் இவர்கள் கோபத்தை விடமாட்டார்கள். இவர்கள் உள்ளத்தில் கோபம் நெருப்புப் புகைவதுபோல புகைந்துகொண்டே இருக்கும். கோபத்தை மனத்தில் வைத்து, ஒருவருக்கொருவர் உடலாலும் சொல்லாலும் மனத்தாலும் தீங்கு செய்வார்கள்.

தங்கத்தில் பிளவு உண்டானால் மீண்டும் கூடிவிடும். சிலர் கடுங்கோபத்தால் வேறுபட்டால், நல்லவர்கள் இவர்களைச் சமாதானப் படுத்தி சேர்த்து விட்டால், இவர்கள் கோபத்தை மறந்து சேர்ந்து கொள்வார்கள்.

நீரில் அம்பு எய்தால், அதில் உண்டான பிளவு உடனே மறைந்துவிடும். சான்றோர் மனத்தில் எழும் கோபம், நீரில் உண்டான பிளவுபோல் உடனே மறைந்துவிடும். இவர்கள் கோபத்தை மனத்தில் வைத்து எவருக்கும் தீங்கு செய்வதில்லை.

கோபம் எவ்வகையாயினும் அது கொடியதே! ஒருவன் கோபத்தினால் மற்றவருக்குக் கேடு செய்யாவிட்டாலும் இவன் கோபம் இவனைச் சுடும். இவனுக்குத் துன்பம் தரும். ஆகவே, மற்றவருக்குத் தீங்கு செய்யாவிட்டாலும் கோபம் கொடியதே!

ஆனால், கோபத்தில் ஒருவன் மற்றவர்களுக்குக் கேடு செய்தானென்றால், இங்கு அவனுக்குப் பழியும் அடுத்த உலகிற்குப் பாவமும் வருவதால், கோபத்தைக் காட்டிலும் தீயவை வேறு எதுவும் இல்லை.
இதைத்தான் திருவள்ளுவர் இவ்வாறு கூறுகிறார்:

**செல்லா இடத்துச் சினந்தீது - செல்லிடத்தும்**
**இல் அதனின் தீயபிற.**

செல்லா இடத்துச் சினம் தீது:

அதாவது, ஒருவன் கோபத்தினால் மற்றவருக்குத்

தீங்கு செய்யாவிட்டாலும் இவன் கோபம் இவனைச் சுடும். அந்தக் கோபம் எனும் தீ இவனை எரிக்கும். ஆகவே கோபம் கொடியது.

செல்லிடத்தும் இல் அதனின் தீயபிற:

அதாவது, ஒருவன் கோபத்தினால் மற்றவர்களுக்குத் தீங்கு செய்தானென்றால், இங்கு பழியும் அடுத்த உலகிற்குப் பாவமும் வந்து சேரும். பழி என்பது, இவன் கோபத்தினால் செய்த குற்றங்களைக் கண்டு மற்றவர்கள் இவனைப் பழிப்பார்கள். பாவம் என்பது, இவன் கோபத்தினால் செய்த குற்றங்கள், மறு பிறப்பில் இவனுக்குத் தண்டனை வழங்கும். ஆகவே, கோபத்தைவிடக் கொடியது வேறு எதுவும் இல்லை எனத் திருவள்ளுவர் கூற்றியுள்ளார்.

**மறத்தல் வெகுளியை யார்மாட்டும் - தீய**
**பிறத்தல் அதனான் வரும்.**

எவரிடத்தும் சினம் கொள்ளாமல், சினத்தை மறக்க வேண்டும். சினத்தை ஒரு பொருளென்று கருதி, அதில் ஒருவன் பெருமைப் படுவானாயின், தீமையான விளைவுகள் அந்தச் சினத்தாலேயே ஏற்படும் என்று திருவள்ளுவர்
கூறியிருக்கின்றார்.

பகவான் புத்தரும் இதனையே இவ்வாறு கூறியுள்ளார்:

**மனத்தில் எழும் கோபத்தைக் காக்க வேண்டும்; காக்காவிட்டால், தீய எண்ணங்களால் கேடு வரும். நாவின் கோபம் காக்க வேண்டும்; காக்காவிட்டால், தவறான சொற்களால் கேடு வரும்; உடலின் கோபம் காக்க வேண்டும்; காக்காவிட்டால், தவறான செயல்களால் கேடு வரும்.**

கோபத்தினால் வரும் துன்பங்களைப் பகவான் புத்தரும் திருவள்ளுவரும் இவ்வாறு விளக்கியுள்ளார்கள்:

**கோபக்காரன் முக மலர்ச்சியை இழப்பான்:**

கோபம் முகமலர்ச்சியைக் கெடுக்கும். முழுநிலவைப் போன்ற அழகிய முகம் கோபத்தினால் கருகிய தாமரையைப் போல் பொலிவு இழந்துவிடும். சினம் கொண்டவனின் பார்வையில் வெறுப்பும் பகைமையும் தோன்றும். அங்கு அன்பும் கருணையும் இருக்காது. அழகிய முகமும் கோபத்தினால் அழகிழந்து விகாரமாகத் தோன்றும். இதைத்தான் கோபக்காரன் முக மலர்ச்சியை இழப்பான் எனப் பகவான் புத்தர் கூறியுள்ளார்.

**கோபக்காரன் அகமகிழ்ச்சியை இழப்பான்:**

கோபம் அகத்தின் அழகை அழிக்கும். அன்பு, அறம்,

நல்ல பண்புகள் போன்றவை அகத்தின் அழகு ஆகும். கோபம் ஒரு மனிதனை ஆட்கொள்ளுமாயின், அந்தக் கோபம் எனும் தீ, அவனுடைய அன்பையும் அறத்தையும் நல்ல பண்புகளையும் அழித்துவிடும். பகைமையும் வெறுப்பும் இவன் மனத்தை ஆட்கொள்ளும். ஆகவே, கோபம் அகமலர்ச்சியைக் கொல்லும் என்கிறார் பகவான் புத்தர்.

திருவள்ளுவரும் இதனையே இவ்வாறு கூறியுள்ளார்:

**நகையும் உவகையும் கொல்லும் -சினத்தின்**
**பகையும் உளவோ பிற.**

முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் கொன்றுவிடுகின்ற கோபத்தைக் காட்டிலும் கொடிய பகை வேறு உண்டோ ஒருவனுக்கு? (இல்லை) பிறகு ஏன் அதை ஒரு பொருளென்று கருதி அதில் ஒருவன் பெருமைப்பட வேண்டும். அதை ஒரு கொடிய பகைவன் எனக் கருதி அதற்கு உள்ளத்தில் இடம் கொடுக்கக் கூடாது என்கிறார் திருவள்ளுவர். கோபம் முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் அழிப்பதால், அதைவிடக் கொடிய பகைவன் இல்லையென்றும் அப்பகைவனுக்கு நம் உள்ளத்தில் இடம் கொடுக்கக் கூடாதென்றும் பகவான் புத்தரும் திருவள்ளுவரும் கூறியுள்ளார்கள்.

## கோபக்காரன் தூக்கம் இழப்பான்:

கோபம் தூக்கத்தைக் கெடுக்கும். கோபம் ஒரு மனிதனை ஆட்கொள்ளுமாயின், அவன் எவ்வளவுதான் சுகமான படுக்கையில் படுத்து உறங்கிய போதிலும் இவனைக் கோபம் வருத்துவதால், தூக்கமின்றி, புரண்டு புரண்டு படுத்து துன்பப்படுவான் எனப் பகவான் புத்தர் கூறியுள்ளார்.

## கோபக்காரன் நண்பர்களை இழப்பான்:

ஒரு மனிதனைக் கோபம் ஆட்கொள்ளுமாயின், அந்தக் கோபம் எனும் தீ இவன் நண்பர்களைச் சுடும். எப்படிச் சுடும்? இவன் கடுஞ்சினத்தில் அறத்தை மறந்து, நல்ல பண்புகளை மறந்து, நன்றி மறந்து, அறிவிழந்து, கடுஞ்சொற்களைப் பேசுவான். நண்பர்கள் மனம் புண்படப் பேசுவான். நண்பர்கள் என்றும் பாராமல் கேடு செய்வான். இவனைக் கண்டு நண்பர்கள் அஞ்சுவார்கள். இவன் நட்பை விரும்பமாட்டார்கள். இவன் கோபக்காரன்; இவன் கேடு செய்வான் என்று இவனிடமிருந்து விலகிக் கொள்வார்கள். ஆகவே, கோபக்காரன் நண்பர்களை இழப்பான் என்று பகவான் புத்தர் கூறியிருக்கின்றார்.

## கோபக்காரன் உறவு இழப்பான்:

கோபக்காரன் உறவினர்களையும் பகைத்துக் கொள்வான். கோபக்காரன் கடுஞ்சினத்தில் உறவினர் மனம் புண்படப் பேசுவான். கடுஞ்சினத்தில் அறிவிழந்து, உறவினர் என்றும் பாராமல் கேடு செய்வான். இவன் கோபம் உறவினர்களைச் சுடுவதால் அவர்கள் இவன் அருகில் வரமாட்டார்கள். இவன் உறவை விரும்பமாட்டார்கள். அவர்களும் நண்பர்களைப்போல் இவனிடமிருந்து விலகிக்கொள்வார்கள். ஆகவே, கோபக்காரன் உறவினர்களை இழப்பான்.

கோபம் எனும் நெருப்பானது தன்னையும் கொல்லும்; தனக்குப் பாதுகாவலராக உள்ள நண்பர்களையும் உறவினர்களையும் சுடும் எனத் திருவள்ளவர் கூறியுள்ளார்.

**சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி - இனமென்னும்**
**ஏமப் புணையச் சுடும்.**

விறகைப் பற்றிய நெருப்பானது விறகை அழித்துவிடும். கோபம் எனும் நெருப்பு, ஒரு மனிதனின் அன்பையும் அறத்தையும் நல்ல பண்புகளையும் அழித்துவிடும். கடுஞ்சினத்தில் இவன் அறிவிழந்து, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் கேடு செய்வதால், அவர்களையும் இந்த நெருப்பானது சுடும். ஆகவே,

கோபம் தன்னையும் அழித்து, தனக்கு நன்மை செய்வோரின் உறவையும் சுட்டழிக்கும் என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார். ஆகவே, கோபக்காரன் இவனுக்கு உதவக்கூடிய நண்பர்களின் பாதுகாப்பையும் உறவினர்களின் பாதுகாப்பையும் இழந்துவிடுவான்.

**கோபக்காரன் அவமானப் படுவான்:**

கோபத்தில் சிலர், தாங்கள் மிகவும் வல்லவர்கள் என எண்ணி, தங்கள் திறமைக்கும் ஆற்றலுக்கும் பலத்திற்கும் அப்பாற்பட்டதைச் செய்வோம் என்று வீரம் பேசி, பின்னால் அவமானப்படுவார்கள்.

ஒரு கிராமத்தில் கணவன் மனைவி இருவர் வாழ்ந்து வந்தனர். கணவன் கோபக்காரன். அவனுக்கு அடிக்கடி கோபம் வரும். அவன் கோபத்தினால் வீட்டில் நிம்மதி இல்லை. தீராத சண்டை. ஒரு முறை அவன் கடுஞ்சினத்தில், மனைவியைத் திட்டிவிட்டு, "போதும் போதும் உன்னோடு வாழ்ந்த இல்லற வாழ்க்கை. இன்றிலிருந்து நான் துறவியாகப் போகிறேன்," என்று சொல்லி, தான் கட்டியிருந்த நான்கு முழ வேட்டியை இரண்டாகக் கிழித்து, ஒரு பகுதியைக் கோவணமாகக் கட்டிக் கொண்டு, மறு பகுதியைத் தோல்மேல் போட்டுக் கொண்டு, மிக வேகமாக வீட்டைவிட்டு வெளியேறினான். மனைவி தன் மனத்துக்குள், “ஐயாவுடைய துறவு கோபம்

இருக்கும்வரைதான்," என்று எண்ணிக் கொண்டு கணவனைத் தடுக்கவில்லை.

வெளியே வந்தவன் அங்கு கிடந்த ஒரு சப்புக் குடத்தைப் பார்த்ததும் மேலும் சினங்கொண்டு, மனைவியைக் கூப்பிட்டு, "அடியே, உனக்கு அறிவு இருக்கிறதா! செப்புக் குடத்தை வெளியே போட்டிருக்கிறாயே! எடுத்து உள்ளே வை," என்று கூறினான். மனைவி உள்ளிருந்தவாறே, "ஐயாவிற்கு இந்தச் செப்புக் குடத்தைக் கூடத் துறக்க மனமில்லை; உலகைத் துறக்கப் போகிறாராம்," என்றாள். இதைக் கேட்டதும் கணவரின் நடை தளர்ந்துவிட்டது. சிறிது தூரம் போய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துவிட்டு, கோபம் தணிந்ததும் வீடு திரும்பிய கணவன், நான்கு முழ வேட்டியையும் கிழித்து வீணாக்கிவிட்டேனே! என வருந்தினான். இந்தக் கணவனைப்போல் சிலர் கடுஞ்சினத்தில், தான் மிகவும் வல்லவன் எனக் கருதித் தன் சக்திக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டதைச் செய்வேன் என்று வீரம் பேசி, பின்னர் பொருளையும் இழந்து அவமானப்படுவார்கள்.

**கோபக்காரன் புகழ் இழப்பான்:**

சிர் பல நற்செயல்கள் செய்து தன் உழைப்பால், தன் வியர்வையால், தன் முயற்சியால் புகழைத் தேடியிருப்பார்கள். கடுஞ்சினத்தில் அறிவிழந்து, தவறான

வார்த்தைகளைப் பேசி, தவறான செயல்களைச் செய்து, அந்தப் புகழை இழந்துவிடுவார்கள். நற்செயல்கள் செய்து தேடிய புகழை, நல்ல ஒழுக்கங்களாலும் நல்ல பண்புகளாலும் காக்க வேண்டும். ஆனால், சில பலகாலம் உழைத்துத் தேடிய புகழைக் கடுஞ்சினத்தால் அறிவிழந்து, குற்றங்கள் செய்து இழந்து விடுவார்கள்.

இதனை விளக்கப் பகவான் புத்தர் இக்கதையைக் கூறினார்:

முன்னொரு காலத்தில் சவத்திப் பட்டணத்தில் ஒரு சீமாட்டி வாழ்ந்து வந்தாள். அவள் எவரிடமும் சினம் கொள்வதில்லை. அப்பட்டணத்து மக்கள் அவளை அடக்கமுள்வள்; பணிவுள்ளவள்; பொறுமையானவள்; சாதுவானவள்; நற்பண்புள்ளவள் எனப் புகழ்ந்தார்கள். இவளிடம் ஓர் அடிமைப் பெண் பணிபுரிந்து வந்தாள். அவள் பெயர் காளி. காளி மிகவும் கெட்டிக்காரி. வீட்டு வேலைகளையெல்லாம் செம்மையாகச் செய்துவிடுவாள். எஜமானி எக்குறையையும் கூறாத அளவுக்கு மிகத் திறமையாக வீட்டு வேலைகளைச் செய்துவிடுவாள். காளிக்கு மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. நம் எஜமானி எவரிடமும் கோபம் கொள்வதில்லை. உண்மையில் இவள் உள்ளத்தில் கோபம் இல்லாதவளா? அல்லது உள்ளத்தில்

கோபத்தை வைத்துக் கொண்டு வெளியில் காண்பிக்காமல் இருக்கின்றாளா? நாம் இவளைச் சோதித்துப் பார்ப்போம் என்று மறுநாள் காலையில் சிறிது தாமதமாக எழுந்தாள்.

மறுநாள் காலையில் காளி சிறிது தாமதமாக எழுந்ததைக் கண்ட எஜமானி காளியைக் கூப்பிட்டு, “காளி ஏன் இன்று தாமதமாக எழுந்தாய்?" என்று கேட்டாள். “நான் தூங்கிவிட்டேன் எஜமானி," என்று காளி பதில் கூறினாள். எஜமானி சினங்கொண்டு அவளை முறைத்துப் பார்த்துவிட்டுப் போய்விட்டாள்.

காளிக்கு இன்னும் சந்தேகம் கூடிவிட்டது. நம் எஜமானி உண்மையிலேயே கோபம் இல்லாதவளா! நாளையும் சோதித்துப் பார்ப்போம் என்று மறுநாளும் சிறிது தாமதமாக எழுந்தாள். எஜமானி காளியைக் கூப்பிட்டு, "காளி, ஏன் இன்று தாமதமாக எழுந்தாய்?" என்று கேட்டாள்.

"நான் கொஞ்சம் தூங்கிவிட்டேன் எஜமானி," என்று காளி பதில் கூறினாள். எஜமானி சினங்கொண்டு, “உனக்குத் தூக்கம் அதிகமோ,” என்று கடிந்துவிட்டுப் போய்விட்டாள். காளிக்குச் சந்தேகம் மேலும் அதிகரித்துவிட்டது. நம் எஜமானி உண்மையில் கோபம் இல்லாதவளா, அல்லது நான் வீட்டு வேலைகளையெல்லாம் திறமையாகச் செய்வதால், என் மேல் கோபத்தைக்

காட்டவில்லையா? நாளைக்கும் சோதித்துப் பார்ப்போம் என்று மறுநாள் காலையிலும் சிறிது தாமதமாக எழுந்தாள்.

எஜமானி காளியை அழைத்துச் சினங்கொண்டு, "காளி, ஏன் இன்று தாமதமாக எழுந்தாய்?" என்று கேட்டாள். "நான் சிறிது தூங்கிவிட்டேன் எஜமானி என்று காளி கூறினாள். எஜமானி கடுஞ்சினங்கோண்டு, பக்கத்தில் இருந்த தடியை எடுத்துக் காளியின் தலையில் ஓங்கி அடித்து விட்டாள். காளியின் தலை பிளந்து, இரத்தம் வழிந்தது. தலை பிளந்து இரத்தம் சிந்த வெளியே ஓடிவந்த காளி, அவ்வழியே போனோரிடம், "நான் சிறிது தாமதமாக எழுந்தமைக்காக, என் எஜமானி தடியால் அடித்து, என் தலையைப் பிளந்துவிட்டாள்; இவள் மிகவும் கோபக்காரி," எனக்கூறி அழ ஆரம்பித்தாள்.

காளியின் தலையிலிருந்து வடிந்த இரத்தத்தையும் அவள் அழுகையையும் கண்ட மக்கள் இவளுடைய எஜமானி சாந்தமானவள்; கோபம் கொள்ளாதவள் எனத் தவறாக எண்ணிவிட்டோமே என்று அன்றிலிருந்து இவள் கோபக்காரி என்று தூற்ற ஆரம்பித்தார்கள். அந்த எஜமானியைப் போல் சிலர், பல நற்செயல்கள் செய்து தேடிய புகழைக் கடுஞ்சினத்தில், தவறான வார்த்தைகள் பேசி, தவறான செயல்கள் செய்து, இழந்துவிடுவார்கள்.

## கோபக்காரன் பொருள் இழப்பான்:

கோபக்காரன் இலாபத்தை நஷ்டம் என்றும் நஷ்டத்தை இலாபம் என்றும் தவறாக எண்ணிப் பொருள் இழப்பான். நன்மையைத் தீமையென்றும் தீமையை நன்மையென்றும் தவறாக எண்ணிப் பொருள் இழப்பான்.

இவன் வியாபாரம் செய்தானென்றால், கோபத்தில் நஷ்டத்தை இலாபம் என்றும் இலாபத்தை நஷ்டம் என்றும் தவறாகக் கணக்கிட்டுப் பொருள் இழப்பான். இவனுக்கு அடிக்கடி கோபம் வருவதால், மக்கள் இவனை நாடி வரமாட்டார்கள். வேறு வியாபாரிகளிடம் போவார்கள். இவன் வியாபாரம் இல்லாமல், முதலீடு செய்த பணத்தையும்  இழந்து நஷ்டப் படுவான்.

இவன் ஊதியத்திற்கு வேலை செய்தானென்றால், இவனுக்கு அடிக்கடி கோபம் வருவதால், மற்றச் சக ஊழியர்களுக்கும் இவனுக்கும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் வரும். வேலை தடைப்படும். இவனுடைய மேல் அதிகாரிகள், இவனைக் கண்டித்து, இவன் ஊதியத்தைக்  குறைக்கலாம் அல்லது வேலையை விட்டு நீக்கலாம்.

அப்படியே இவனிடம் பொருள் இருந்தாலும் அடிக்கடி கோபம் வரக்கூடியவனிடம் பொருள் நீண்ட

காலம் நிலைத்து நிற்காது. இவன் கோபத்தினால், குற்றங்கள் பல செய்து, பொருளைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து விடுவான்.

கோபக்காரன் பொருள் இழப்பான் என்பதைத் திருவள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்:

**கடுஞ்சொல்லான் கண்ணின் ஆயின் - நெடுஞ்செல்வம்**
**நீடின்றி ஆங்கே கெடும்.**

கடுமையான சொல்லும் கருணையற்ற பார்வையும் உடையவனின் பெருஞ்செல்வம் நெடுங்காலம் அவனிடம் தங்காது. சிறிது சிறிதாகக் குறைந்து அழிந்துபோகும் என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார்.

தொடர்ந்து திருவள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்:

**அருஞ்செல்வி இன்னா முகத்தான் - பெருஞ்செல்வம்**
**பேய்கண்டு அன்னது உடைத்து.**

தன்னைத் தேடி வருவோரைச் சந்திக்க விரும்பாதவனுடைய பெருஞ்செல்வம் அப்படியே சந்தித்தாலும் வந்தவரிடம் சினங்கொண்டு, கடுகடுப்பான பார்வையும் வெறுப்பான முகத்தையும் காட்டுபவனுடைய செல்வம், பூதம் காக்கும் செல்வம் போல்தான் என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார். உள்ளத்தில் அன்பில்லாமல், சினங்கொண்டு மற்றவரிடம் கடிந்து

பேசுபவனின் செல்வம், பூதம் காக்கும் செல்வம் போல்தான். ஏன்? அங்கு செல்வம் இருந்தபோதிலும் அங்குப் போக மக்கள் அஞ்சுவார்கள். அச்செல்வத்துக்குப் புகழ் இல்லை.

**கோபக்காரன் நன்றி மறந்து கேடு செய்வான்:**

கோபக்காரன் கடுஞ்சினத்தில், நண்பனைப் பகைவன் என்றும் நல்லோரைத் தீயோர் என்றும் அறிவிழந்து கேடு செய்வான். தனக்கு உதவியோருக்கும் கடுஞ்சினத்தில், செய்ந்நன்றி மறந்து, கேடு செய்வான். கோபம் தணிந்தபின், நெருப்பினால் எரிக்கப்பட்டதுபோல் தன் தவற்றை எண்ணி வருந்துவான்.

ஒரு கிராமத்தில் கணவன் மனைவி இருவர் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லாததால், மனைவி ஒரு கீரிப் பிள்ளையை மிகவும் அன்புடன் வளர்த்து வந்தாள். சிலகாலம் கழித்து அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. கீரியையும் தங்கள் குழந்தையோடு அன்பாக வளர்த்து வந்தாள். ஒரு நாள் அருகிலிருந்த கிணற்றில் நீர் எடுக்கச் சென்றாள். தன் கணவனிடம், "குழந்தை தொட்டிலில் தூங்குகிறது. பார்த்து கொள்ளுங்கள்," என்று கூறிச் சென்றாள்.

அவள் போனவுடன் கணவன், "குழந்தை தூங்குகிறான். கொஞ்சம் வெளியில் போய் வருவோம்

எனப் போய்விட்டான். அச்சமயம் வீட்டினுள் ஒரு கருநாகம் நுழைந்தது. நாகம் தொட்டியிலிருந்த குழந்தையைத் தீண்டச் சென்றது. இதைக் கண்ட கீரி, பாம்போடு போராடி அதைக் கொன்று, கடித்துத் துண்டு துண்டாக்கியது. நீர் எடுக்கச் சென்றவள் குடத்தில் நீருடன் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள். கீரி, தான் பாம்பைக் கொன்று குழந்தையைக் காப்பாற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் அவளை நோக்கி ஓடி வந்தது.

நாகத்தைக் கொன்ற கீரியின் வாய், உடலெல்லாம் இரத்தம் படிந்திருப்பதைக் கண்ட அவள் கடுஞ்சினத்தில் அறிவிழந்து, "ஐயோ, கீரி என் குழந்தையைக் கொன்றுவிட்டதே!” எனக்கூறி, தான் சுமந்து வந்த குடத்தை அதன் மேல் போட்டு விட்டு வீட்டுக்குள் ஓடினாள்.

குடத்தினால் நசுக்கப்பட்ட கீரி அங்கேயே இறந்துவிட்டது. வீட்டிற்குள் ஓடி வந்தவள், தொட்டியில் குழந்தை சுகமாகத் தூங்குவதையும் அருகில் நாகம் இறந்து கிடப்பதையும் கண்டு நடந்ததைப் புரிந்து கொண்டாள். உண்மை விளங்கியதும் கோபம் தணிந்தது. கோபம் தணிந்ததும் தான் செய்த செயலின் கொடுமையை உணர்ந்து, “ஐயோ, பிள்ளையைப்போல் வளர்த்த கீரியை என் கையாலேயே கொன்றுவிட்டேனே! தன் உயிரையும் பொருட்படுத்தாமல், குழந்தையைக் காப்பாற்றிய கீரியை, அறிவிழந்து கொன்றுவிட்டேனே!" என்று தலையிலும்

மார்பிலும் அடித்துக் கொண்டு அழுதாள்.

இவளைப்போல் சிலர், செய்ந்நன்றி மறந்து, தமக்கு உதவியோருக்கும் கேடு செய்வார்கள். கோபம் தணிந்தபின், தம் தவற்றை நினைத்து, நெருப்பினால் சுடப்பட்டதுபோல் வேதனைப்படுவர்.

**கோபம் கோபத்தோடு மோதினால் அழிவு வரும்:**

கோபம் கோபத்தோடு மோதுவதென்பது, கடுஞ்சினத்தால் இருவர் ஒருவருக்கொருவர் கேடு செய்து கொள்வதாகும். கோபத்தில் இருவர் அறிவிழந்து, நல்ல பண்புகளை மறந்து, பகைமை பாராட்டி, ஒருவருக்கொருவர் கேடு நினைப்பார்கள். கடுஞ்சொற்களால் ஒருவரையொருவர் நிந்திப்பார்கள். கையில் ஆயுதம் ஏந்தி ஒருவருக்கொருவர் கேடு செய்து கொள்வார்கள். கடுஞ்சினத்தில் இருவர் கேடு செய்து கொள்வதால், கோபம் கோபத்தோடு மோதினால் அழிவு வரும் என்று கூறினேன். இவர்களின் கோபம் இவர்களை அழித்துவிடும். எப்படி அழிக்கும்?

ஒரு மலையில் ஓர் ஆழமான பள்ளத்தின் மேல் ஒரு குறுகிய மரப்பாலம் இருந்தது. பள்ளமோ ஆழமானது. பாலமோ மிகக் குறுகியது; இருவர் ஒரே நேரத்தில் எதிரும் புதிருமாகச் செல்ல முடியாது. இரு ஆடுகள்,

ஒன்று இந்தப் புறமிருந்தும் மற்றொன்று அடுத்தப் புறமிருந்தும் பாலத்தைக் கடக்க வந்தன. இரண்டும் நடுப்பாலத்தில் ஒன்றையொன்று சந்தித்தன. பாலமோ குறுகியது. விலகிப் போகவும் முடியாது. இரண்டும், "நம் வழி மறைக்கிறானே," என்று சினங்கொண்டு ஒன்றையொன்று முறைத்துப் பார்த்தன. இங்கிருந்து போன ஆடு, அங்கிருந்து வந்த ஆட்டைப் பார்த்து, "வழிவிடு" என்று அகங்காரத்துடன் கத்தியது.

அங்கிருந்து வந்த ஆடு, அதை முறைத்துப் பார்த்துச் சினங்கொண்டு, “நீ என்ன வல்லவனோ, எனக்கு நீ வழிவிடு," என்றது.

இங்கிருந்து போன ஆடு, “இவன் வழியை மறைப்பதுமில்லாமல், என் வல்லமையை இகழ்கிறானே!” என்று கடுஞ்சினம் கொண்டது.

இரு ஆடுகளும் கடுஞ்சினத்தில், ஆபத்தை மறந்து, குறுகிய பாலத்தின் மேல் நின்கிறோம் என்பதையும் மறந்து, கீழே பெருவெள்ளம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதையும் மறந்து, ஒன்றையொன்று முட்டின. இரு ஆடுகளுக்கும் கால் சறுக்கி பள்ளத்தில் விழுந்து, பாறைகளில் மோதி இறந்தன.

இந்த ஆடுகளைப்போல் சிலர் கடுஞ்சினத்தில் ஒருவருக்கொருவர் கேடுசெய்து கொள்வார்கள். ஆகவே,

கோபம் கோபத்தோடு மோதினால் கேடு விளையும்.

**கோபக்காரன் அடுத்த உலகில் துன்பப் படுவான்:**

கோபக்காரன், கோபத்தினால் குற்றங்கள் பல செய்து, அடுத்த உலகிற்குப் பாவம் என்னும் சொத்தைத் தேடிக் கொள்வான். இவன் கோபத்தினால், எண்ணத்தாலும் சொல்லாலும் உடலாலும் குற்றங்கள் செய்வதால், இவன் செய்த பாவச் செயல்கள், இவன் உடலிலிருந்து உயிர் பிரிந்தபின், அடுத்த உலகில் இவனுக்கு நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ பிறப்பை அமைக்கும் என்று பகவான் புத்தர் கூறியுள்ளார்.

இதுவரை கோபத்தினால் விளையும் கேடுகளை விளக்கினேன். இவ்வளவு துன்பம் தரும் சினத்தை ஒரு பொருளென்று கருதி, அதில் பெருமைப் படுபவனை அறிவுடையவன் என்று எப்படிச் சொல்வது? இங்கும் கேடு செய்து, உடலைவிட்டு உயிர் பிரிந்தபின், அடுத்த உலகிலும் துன்பம் தரும் கோபத்தைக் காட்டிலும் கொடிய பகைவன் வேறு இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்து, நீங்கள் யாவரும் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் கோபத்தை மறக்க வேண்டும். இதை வாழ்க்கையில் ஒரு நல்ல ஒழுக்க நெறியாகக் கொண்டீர்களென்றால், கோபத்தினால் விளையும் தீமைகளிலிருந்து நீங்கள் விடுபடலாம்.

# <u>மற்ற வெளியீடுகள்</u>

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்